## தேனி மாவட்டத்தில்

# த.வெ.க. ஆட்சியில் செம்மண், கரம்பை மண் கொள்ளை!

## கண்டுகொள்ளாத மாவட்ட நிர்வாகம் – என விவசாயிகள் குற்றச்சாட்டு!



தேனி: ஜூலை 23-

தேனி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சட்டவிரோதமாக செம்மண் மற்றும் கரம்பை மண் அள்ளப்பட்டு வரும் நிலையில், இதனைத் தடுக்க வேண்டிய மாவட்ட நிர்வாகமும், கனிமவளத் துறையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்ப்பதாக விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

**விதிமுறைகளை மீறி அள்ளப்படும் இயற்கை வளம்!**

தேனி மாவட்டத்தைச் சுற்றியுள்ள விவசாய நிலங்கள், கண்மாய் ஓரங்கள் மற்றும் தரிசு நிலங்களில், உரிய அனுமதியின்றி இரவோடு இரவாக பொக்லைன் இயந்திரங்கள் மூலம் டன் கணக்கில் செம்மண் மற்றும் கரம்பை மண் அள்ளப்பட்டு வருகிறது.

விவசாயப் பயன்பாட்டிற்கு எனச் சில இடங்களில் அனுமதி பெறப்பட்டு, அதைச் சாக்காக வைத்து வணிக நோக்கில் தனியார் நிறுவனங்களுக்கும், செங்கல் சூளைகளுக்கும் லாரிகள் மூலம் கடத்தப்படுவதாகப் புகார் எழுந்துள்ளது.

இயற்கைச் சூழலும் நிலத்தடி நீரும் பாதிப்பு

நிலத்தடி நீர் மட்டம் சரிவு: அளவுக்கு அதிகமாகப் பூமியைத் தோண்டி மண்ணை எடுப்பதால் அப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகப் பாதாளத்திற்குச் சென்றுள்ளது.

விவசாய நிலங்கள் சுரண்டப்படுவதால், சுற்றியுள்ள விவசாய நிலங்களின் மண் வளம் முற்றிலும் பாதிக்கப்படுகிறது.

சாலைகள் சேதம்: கனரக லாரிகள் தொடர்ச்சியாகச் சென்று வருவதால் ஊரகச் சாலைகள் முற்றிலும் சேதமடைந்து பொதுமக்கள் நடமாட முடியாத சூழல் உருவாகியுள்ளது.

**பொதுமக்கள் கோரிக்கை!**

"த.வெ.க. அரசுஅதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும், தற்காலிகமாக லாரிகளைப் பிடிப்பது போலக் காட்டிவிட்டு மீண்டும் கொள்ளை தொடர அனுமதிக்கப்படுகிறது. மாவட்ட நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு, செம்மண் மற்றும் கரம்பை மண் கடத்தலில் ஈடுபடுவோர் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனச் சமூக ஆர்வலர்களும் விவசாய சங்கத்தினரும் வலியுறுத்தியுள்ளனர்.

உடனடியாகக் கனிமவளத் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகள் அடங்கிய தனிப்படை அமைத்துச் சோதனை நடத்தப்பட வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# நெல்லை மாநகராட்சி மேயரை கொலை செய்ய வந்த மர்ம நபர் - விசாரணை தேவை!

## நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் கண்டன அறிக்கை!

நெல்லை.ஜுலை.23.

நெல்லை மாநகராட்சி மேயரை கொலை செய்ய வந்த மர்ம நபர்களை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வலியுறுத்தி கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

நெல்லை மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன் என்ற கிட்டு நெல்லை டவுண் வேணுவனகுமாரர் கோவில் தெருவில் உள்ள அவரது வீட்டுக்கு சென்றுள்ளார். (திங்கட்கிழமை) இரவு சுமார் 9 மணி அளவில் மாநகராட்சி பணிகளை முடித்துவிட்டு அவரது காரில் வீடு திரும்பி உள்ளார்.அப்போது மேயர் வீட்டின் அருகே ஒரு சில மர்மநபர்கள் அவர்களின் இருசக்கர வாகனத்தை சாய்த்த நிலையில் நின்று கொண்டிருந்துள்ளனர் மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்த மர்மநபர்கள் அவர்களது செல்போனில் வீடியோவை ஆன் செய்து மேயரின் இல்லம் எங்கே உள்ளது என்று பேசியபடி தெருவில் அங்கும்,இங்கும் சென்றுள்ளனர்.

அப்போது மேயர் அவர் இல்லத்திற்கு சென்று கண்களில் மருந்து ஊற்றிவிட்டு ஓய்வு எடுத்துள்ளார்.அப்போது அவரது தெருநு நின்று கொண்டிருந்த மர்ம நபர்கள் 3 பேரும் மேயரை கொலை செய்ய வந்ததாக அவரது உறவுக்கார பெண்ணிடம் கூறியுள்ளனர். உடனே அவரது உறவுக்காரபெண்கூச்சலிட்டதால் அக்கம் பக்கத்தினர் மேயர் இல்லத்தில் கூறியுள்ளனர். உடனடியாக போலீசார் அவர் இல்லத்திற்கு சென்று மர்மநபர்களை கைது செய்துள்ளனர்.

எனவே மேயரை கொலை செய்த வந்த மர்ம நபர்களை விசாரித்து, தமிழக அரசும் காவல்துறையும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தென்காசி தெற்கு மாவட்டம் சுரண்டையில்

# காமராஜர் பிறந்த நாள் விழா - நலத்திட்ட உதவிகள்!

## மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி.ஜுலை.23-

தென்காசி தெற்கு மாவட்டம் சுரண்டையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் காமராஜர் அவர்கள் புகழைப் போற்றி உரையாற்றியவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் ஆகியோர் பங்கேற்று வழங்கினர்.

கர்மவீரர் பெருந்தலைவர் கு.காமராஜர் அவர்களின் 124 வது பிறந்தநாள் விழா, பெருந்தலைவர் மக்கள் மன்றத்தின் 8வது ஆண்டு துவக்க விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா,சுரண்டை சிவகுருநாதபுரம் இந்து நாடார் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

விழாவின் தொடக்கத்தில் கர்மவீரர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.தொடர்ந்து நடைபெற்ற விழாவில் மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ.பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் கல்விப் புரட்சி,மக்கள் நலத்திட்டங்கள், எளிமை, நேர்மை மற்றும் பொதுச் சேவைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினர். மேலும் விழாவில் நலத்திட்ட உதவிகள் மற்றும் நன்கொடைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் சுரண்டை நகரச் செயலாளர் ஏ.ஜி.கணேசன், பெருந்தலைவர் மக்கள் மன்ற நிர்வாகிகள், நகரக் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## "விவசாய ஜனங்களை" மறந்து "ஜனநாயகனை" கொண்டாடும் ஆட்சியாளர்கள்!

# விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசை கண்டித்து திருவாரூரில் ஆர்ப்பாட்டம்!

திருவாரூர், ஜுலை23-

டெல்டா உள்ளிட்ட தமிழ்நாட்டின் விவசாயத்தை அழித்து, விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக அரசை கண்டித்து திருவாரூர் மாவட்ட திமுக விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி மற்றும் அரசியல் சார்பற்ற அனைத்து விவசாய சங்கங்களின் சார்பாக, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் 24.07.2026. வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக மக்களை திசைதிருப்பும் நோக்கத்தில் பொய்யான வாக்குறுதிகளை தந்த தவெக அரசு , அந்த வாக்குறுதிகளின்படி விவசாயகளின் கூட்டுறவு கடனை முழுமையாக தள்ளுபடி செய்திடவேண்டும்.

ஆட்சியாளர்களின் அலட்சியத்தினால் குருவை சாகுபடி பொய்த்துப்போன நிலையில் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 15000 ரூபாய் நிவாரணம் வழங்கிட வேண்டும்.

விவசாயத்தையே நம்பி வாழும் விவசாய தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மாதம் ரூபாய் 10000 வழங்கிடவேண்டும். கடுமையான வெய்யில் மற்றும் அனல் காற்றினால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி விவசாயி களுக்கு இழப்பீடு வழங்கிடவேண்டும்.

உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தும், மேகதாதுவில் அணைக்கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசையும் அதனை கண்டு கொள்ளாத தவெக அரசை கண்டித்தும் நடைபெற இருக்கும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அரசியல் சார்பற்ற அனைத்து விவசாய சங்கங்களின் தலைவர்கள், நிர்வாகி கள், கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், விவசாயிகள் , விவசாய தொழிலாளர்கள் என பெருந்திரளானோர் பங்கேற்க வேண்டும் என திருவாரூர் மாவட்ட திமுக விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி மற்றும் அரசியல் சார்பற்ற அனைத்து விவசாய சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன.

# தமிழ்நாட்டில் அரிசி விலை கிடுகிடு உயர்வு!

சென்னை, ஜுலை.23-

தமிழ்நாட்டில் 2 வாரங்களுக்கு முன்பு அரிசி விலை அதிகரித்த நிலையில், தற்போது மீண்டும் கிலோவுக்கு 15 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அத்தியாவசிய தேவையான அரிசி விலை உயர்வால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். AD தமிழ்நாட்டில் கடந்த 15 நாட்களுக்கு முன் அரிசி விலை கிலோவுக்கு ரூ.15 வரை உயர்ந்திருந்தது.

இந்நிலையில், இப்போது மீண்டும் கிலோவுக்கு ரூ.3 முதல் ரூ.15 வரை உயர்த்தப்பட்டுள்ளது. 15 நாள் இடைவெளியில் சாப்பாட்டு அரிசியின் விலை கிலோவுக்கு ரூ.30 வரை உயர்ந்திருப்பது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அரசு முன்வந்து ஏழை, நடுத்தர மக்களை நேரடியாக பாதிக்கும் அரிசி விலை உயர்வைத் தடுக்க வேண்டும் எனக் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

கிலோ ரூ.52க்கு விற்பனை செய்யப்பட்ட சாதாரண ரக பொன்னி அரிசி விலை இப்போது ரூ.8 விலை உயர்ந்து ரூ.60 ஆகியுள்ளது. மைசூர் பொன்னி, ஆந்திரா பொன்னி ஆகிய அரிசி வகைகளின் விலை 50 ரூபாயில் இருந்து ரூ.65 ஆக உயர்ந்துள்ளது. சன்னரக அரிசி விலை ரூ.64லிருந்து ரூ.75 ஆக உயர்ந்திருக்கிறது. கர்நாடக பொன்னி அரசி, 65 ரூபாய்க்கு விற்பனையாகி வந்த நிலையில், அது மேலும் 15 ரூபாய் விலை உயர்வு கண்டு 80 ரூபாய்க்கு விற்பனையா கிறது. இட்லி அரிசி விலை கிலோ ரூ.43லிருந்து ரூ.50 ஆக அதிகரித்துள்ளது.

26 கிலோ எடை கொண்ட அரிசி மூட்டை லை ரூ.250 முதல் ரூ.400 வரை உயர்ந்திருக்கிறது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கர்நாடகாவில் நெல் விளைச்சல் குறைந்தது தான் விலை உயர்வுக்கு முக்கிய காரணம் என்கின்றனர்.

பருவ மழை பெய்யாததால் காவிரி பாசன மாவட்டங்களில் கோடை மற்றும் குறுவை பருவ சாகுபடி குறைந்ததும் அரிசி விலை உயர்வுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால், அடுத்த சில மாதங்களில் அரிசி வரத்து குறையும் என்பதை எதிர்பார்த்து வணிகர்கள் செயற்கையாக விலையை உயர்த்தியிருப்பதாக விவசாயிகள்தரப்பில்கூறப்படுகிறது.



மேயர் திருமதி ஆர்.பிரியா, நேற்று (21.07.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு 74க்குட்பட்ட, பெரம்பூர், முரசொலிமாறன் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்பப் பூங்காவில் (STEM Park) உள்ள டிஜிட்டல் கோளரங்கத்தில் சென்னை பள்ளி மாணவர்களுடன் காணொலியினைப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மண்டல அலுவலர் ஜி.சொக்கலிங்கம் மற்றும் அலுவலர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## "கழகத்தின் வேர்களைத் தேடி" – திருத்தணி தெற்கு ஒன்றியம்

# செ.அக்ரஹாரம் கிளைக் கழக நிர்வாகிகளை சந்தித்து கலந்துரையாடல் நிகழ்வு!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர். ஜுலை.23

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், "கழகத்தின் வேர்களைத் தேடி" என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து ஆலோசனைகள் மற்றும் கழகப் பணிகள் குறித்து கேட்டறியும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக, திருத்தணி தெற்கு ஒன்றியம் செ.அக்ரஹாரம் கிளைக் கழக நிர்வாகிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில், கிளைக் கழகங்களின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்துவது, புதிய உறுப்பினர்களை இணைத்தல், மக்களுடனான தொடர்பை விரிவுபடுத்து தல், அரசின் மக்கள் நலத் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்த்தல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மேலும், கிளைக் கழக நிர்வாகிகள் தங்களது பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கழகப் பணிகள் மற்றும் எதிர்கால செயல்திட்டங்கள் குறித்து மாவட்ட செயலாளரிடம் எடுத்துரைத்தனர். அவர்களின் கருத்துகளை கவனமாகக் கேட்ட மாவட்ட செயலாளர், கழகத்தின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டு மென வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் திருத்தணி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.இராஜேந்திரன், கிளைச் செயலாளர்கள் பாலன், ரவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், செ.அக்ரஹாரம் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்று நிகழ்வை சிறப்பித்தனர். "கழகத்தின் வேர்களைத் தேடி" என்ற இந்தத் தொடர் சந்திப்பு, கிளைக் கழக நிர்வாகிகளுக்கு புதிய உற்சாகத்தையும், கழகப் பணிகளை மேலும் தீவிரப்படுத்தும் உத்வேகத்தையும் ஏற்படுத்திய தாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## நாடக மேடைகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி

# தி.மு.க. கொள்கைகளை மக்களிடையே பரப்பியவர் தலைவர் மு.க.ஸ்டாலின்!

## திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் பேச்சு!



திருப்பூர், ஜுலை 23-

சிறுவயதிலிருந்தே இந்த இயக்கத்தின் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் கடைப்பிடித்து, நாடக மேடையிலும் நடித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய ஒரு மகத்தான தலைவர் தான் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் பெருமிதத்துடன் கூறினார்.

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி 36வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக் குழுத் தலைவர் பெ.திவாகரன் ஏற்பாட்டில் கலை & கலாச்சார பாரம்பரிய அணி மாவட்டப் பொறுப்பாளர்கள் தமிழரசன், விக்கி, இளவரசன் மற்றும் மோகன் உள்பட 70க்கும் மேற்பட்ட த.வெ.க.வினர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். இதில் திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி. மு.நாகராஜன், மாவட்ட துணை செயலாளர் டிஜிட்டல் எஸ்.சேகர், பகுதி கழக பொறுப்பாளர்கள் மாமன்ற உறுப்பினர் பி. ஆர்.செந்தில்குமார், க.ஈஸ்வரமூர்த்தி, தம்பி ப. குமாரசாமி, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக்குமார், 36வது வார்டு பொறுப்பாளர்கள் பி.எஸ்.பாண்டியன், தினேஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

க.செல்வராஜ் பேசியதாவது :- வேலைவாய்ப்பிலே இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்களை மாவட்ட கண்காணிப்பாளராக, மாவட்ட ஆட்சியராக பணியாற்றக்கூடிய நிலையை உருவாக்கிய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம், அதன் தலைவர் கலைஞர், அவர் வழியில் வந்தவர் தான் நம்முடைய தளபதி அவர்கள், சாதாரண உழைப்பு அல்ல, சிறு வயதிலிருந்தே இந்த இயக்கத்தின் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் கடைபிடித்து நாடக மேடையிலும் நடித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய ஒரு மகத்தான அண்ணன் தான் தளபதி மு.க.ஸ்டா லின் அவர்கள். சும்மா அவர் வரவில்லை, வந்தவுடன் கலைஞர் பிள்ளை என்று யாரும் ஓட்டு போட்டு விடவில்லை, உழைப்பு, அந்த உழைப்புக்கு பெயர் பெற்றுத்தான் 2021ல் ஆட்சிக்கு பொறுப்புக்கு வந்தார், மகளிருக்கு முக்கியத்துவத்தை கொடுத்தார். இன்று பஸ்களில் பெண்கள் விடியல் பயணம் செல்லலாம் என்ற சட்டத்தை போட்டார் என்று சொன்னால் எந்த ஆட்சி வந்தாலும் அதை பண்ணித்தான் ஆக வேண்டும். 1,000 ரூபாய் பணம் கொடுத்தார்கள் என்று சொன்னால் யார் 10,000 கொடுத்தாலும் சரி இவர் போட்ட திட்டத்தில் தான் கொடுத்து ஆகணும், ஆக ஒவ்வொரு இடத்திலும் மாணவர்களுக்கு படிப்பதற்கு உண்டான வாய்ப்பு நிறைய இருக்கிறது, எதிர் காலத்தில் மாணவர்கள் வந்து விளையாட்டுத் துறைக்குப் போக ஊக்குவித்து பல்வேறு திட்டங்களை தந்தவர் தான் தளபதி அவர்கள், உழைப்பால் மக்களை உருவாக்கி ஆட்சியை நடத்தியவர்கள் தான் நம்முடைய கட்சி தி.மு.க., இப்போது இங்கு வந்து இருக்கிறீர்கள் அல்லவா இது தான் தி.மு.க., ஆனால் விஜயினுடைய கட்சி என்பது நட்பு ரீதியாக ஏற்பட்ட ஒரு சில பிரச்சனை, உலகமே பேசுகிறது விஜய்க்கும், உதயநிதிக்கும் சண்டை வந்ததாலே, ஒரு சின்ன மனக்கசப்பு ஏற்பட்டதாலே அதன் மூலமாகத் தான் திரையுலகத்திலிருந்து கட்சி ஆரம்பித்தார், இன்றைக்கு ஆட்சியை பிடித்தார் என்று நான் சொல்லவில்லை, இன்று டிகடையில் எத்தனையோ பேர் பேசுகிறார்கள், பனியன் கம்பெனியில் வேலை செய்பவர்கள் பேசுகிறார்கள், பனியன் கம்பெனிக்கு வேலைக்கு செல்லும் பெண் குழந்தைகள் பேசுகிறார்கள், இந்த தொகுதியில் உள்ளவர்கள் என்னை பார்ப்பவர்கள் அண்ணா நாங்கள் எல்லாம் என்ன பண்றது, நான் இந்த தொகுதியில் நிற்கவில்லை பல்லடம் தொகுதி சென்று விட்டேன் இருந்தாலும் பரவாயில்லை நான் வேலை செய்து கொடுப்பேன் என்றேன். ஒவ்வொரு நாளும் சந்திக்கின்ற மிகப்பெரிய ஒரு தொழில் அதிபர், அசோசியேஷன் தலைவர் நேற்று சந்திக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது அவர் என்ன சொன்னார் என்றால் நீ இங்கேயே இருந்தால் ஜெபித்திருப்பீர்கள் என்றார், எங்க நின்றால் என்ன அண்ணா என்று சொன்னேன், ஆனால் இப்போது அவர் இந்த ஆட்சி நீடிக்காது என்று பரவலாக பேசிக்கிறார்கள் என்றார். நான் வந்து சரியாக இருந்தால் இருப்பார், அவர் சரியா இலையினா இல்லை என்றேன்.

எத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் விலைக்கு வாங்கினீர்கள் என்றார்

அவர்களிடம் உள்ள 108 எம்.எல்.ஏ.க்களை தவிர்த்து, அமைச்சர்களை தவிர்த்து ஆதரவு வந்தால், எல்லோருமே அவுங்களே வந்து வடுவார்கள், அ.தி.மு.க.வினர் அவர்கள் காலில் விழுகிறார்கள், அ.தி.மு.கவில் இருந்து த.வெ.க.விற்கு விஜயம் செய்து கொண்டிருப்பவர்களால் த.வெ.க. வினரிடையே நாமெல்லாம் புறக்கணிக்கப்படு கிறோம் என்ற வருத்தம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது, இதை நான் போகிற போக்கில் பேசிவிட்டு போகவில்லை இது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. யார் எங்கு இருப்பது என்பது முக்கியமல்ல, எந்த இயக்கம் இருந்தால், எந்த கட்சி ஆட்சி செய்தால் எதிர்காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு கரை படியாத ஆட்சியாக இருந்தது என்று சொன்னால் சமூக நீதி பார்வையோடு பார்த்தால் ஒரு அமைப்பு என்று சொன்னால் அது தி.மு.க. தான், ரொம்ப பக்குவமா, மென்மையாக ஆட்சி செய்த இயக்கம் தி.மு.க., கோவையில் ஒரு சம்பவம் நடந்தது, பெண்களை கற்பழித்தார்கள், சுட சொல்லி உத்தர விட்டார், அங்கங்கே தனியாக நீதிமன்றங்களை உருவாக்கி கடுமையான தண்டனைகள் கொடுத்த கட்சி தி.மு.க., அந்த வகையில் தான் இன்றைக்கு வந்திருக்கிறீர்கள் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. பத்திரிக்கை செய்தித்தாள் தான் இந்த செய்தியை பிரதிபலித்து ஒரு நிலை உருவாக்கினால் தான் சரியாக இருக்கும் என்று நான் பத்திரிக்கை துறையினருக்கு சொல்கிறேன். அந்த வகையிலே இன்றைக்கு ஒரு வரவு நான் வரவு என்று சொல்ல மாட்டேன் நீங்கள் இருக்கிற ஏரியா முழுவதும், அந்த குடும்பங்கள் முழுவதும் என்னுடைய குடும்பம், என்மேல் தனி பற்று, தனி பாசம் கொண்டவர்கள், நீங்கள் எல்லாம் கூட மாற்றி போட்டிருக்கலாம், ஆனால் அங்க இருக்கக்கூடிய என் மேல் அன்பு வைத்திருக்கக்கூடிய சகோதரிகள் எல்லாம் உதய சூரியனுக்கு தான் வாக்களித்து இருப்பார்கள், ஆனால் உங்களை மாதிரி வயசு பசங்கள் மாற்றி போட்டு இருப்பார்கள், அதே நேரத்தில் ஓட்டுப் போட்டவர்கள் வருத்தப்படுகின்ற நிலை வருகின்ற பொழுது ஒரு மன மாற்றத்தை உருவாக்குவதிலே திருப்பூரில் முன்னோடியாக நீங்கள் வந்திருக்கிறீர்கள், இது ஒரு செய்தி அல்ல இது வரலாறு மாறும், வந்தவர்களை வரவேற்பதிலே மத்திய மாவட்ட கழகம் முழுமையாக இருக்கின்றது. அது எப்பவுமே தி.மு.க. கோட்டை தான் இன்று அந்த கோட்டையிலே சிறு ஓட்டை விழுந்திருக்கிறது என்று என் மனதில் வருத்தம் உண்டு அந்த வருத்தம் இன்று போய் விட்டது என்று நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ராயபுரம் என்று சொன்னாலே குறிப்பாக சூசையாபுரம் கோட்டை, கோட்டை தான், தி.மு.க. கொடி தான் பறக்கும் என்கின்ற நிலையை உருவாக்கி வந்திருக்கின்ற தம்பிமார்களுக்கு என்னுடைய மனமார்ந்த மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.